**விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை), கோவில்பட்டி**
**முன்னிலை: திரு. கி. ஆனந்த்., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் கோவில்பட்டி**(மு.கூ.பொ)
2026 வது வருடம், ஜீலை மாதம், 31–ம் நாள், வெள்ளிக்கிழமை
**குற்றப்பல்வகை மனு எண். 66/2026**
**CNR. No.TNTT12-000128-2026**

வெள்ளபாண்டி .........மனுதாரர்

எதிர்

கலா .........எதிர்மனுதாரர்

இம்மனுவானது 31.07.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், அவரது கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மகேந்திரகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில், அவரது கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து கோப்புக்கு எடுக்க உத்தரவிடக்கோரி இந்த மனுவை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

**புகார் மனுவின் சுருக்கம்**

1. மனுதாரர் அசல் வழக்கில் புகார்தாரர். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் எதிரி. இந்த புகார் மனுவை புகார்தாரர் பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இந்த நீதிமன்றத்தில் 1 நாட்கள் காலதாமதாக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு அவதியுற்றிருந்த காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து உரிய காலத்திற்குள் மேற்படி வழக்கை தாக்கல் செய்வதில் 1 நாட்கள் காலதாமதமாகி விட்டது. இந்த காலதாமதம் வேண்டுமென்று ஏற்பட்டதல்ல. எனவே இந்த 1 நாட்கள் கால தாமதத்தை மன்னித்து மேற்படி வழக்கை கோப்பிற்கு எடுக்கப்படவேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று குறிப்பெழுதப்பட்டுள்ளது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.31 16:19:51 +0530

**இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.**

3. இருதரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1 நாள் காலதாமதத்தை மன்னிக்க கோரி இந்த நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் 05.04.2025 தேதியிட்ட காசோலைகள் 05.04.2025 அன்று வசூலுக்கு இடப்பட்டு, 05.04.2025 அன்று திருப்பப்பட்டு, 11.04.2025 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டு, எதிர்மனுதாரர் 16.04.2025 அன்று பெற்றுக்கொண்டுள்ளார். அதன்பின் மனுதாரரால் 02.06.2025 அன்று 1 நாள் காலதாமதத்துடன் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் காலதாமதம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை. அசல் வழக்கில் இரு தரப்பும் கேட்கப்பட்டு முடிவு செய்யப்படவேண்டியது இன்றியமையாதது என்பதாலும், இது குற்ற வழக்கு என்பதாலும், மனுதாரர் காசோலை மோசடியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அசல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மனுதாரர் காலதாமதத்திற்குண்டான போதுமான காரணத்தை மனுவில் குறிப்பிட்டுள்ளதாலும், மேற்படி 1 நாள் காலதாமதம் மன்னிக்கப்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு மேற்படி அசல் வழக்கானது STC ஆக கோப்பிற்கு எடுத்து உத்தரவிடப்படுகிறது .

**எனவே மேற்கண்டவாறு இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் வருடம் ஜீலை மாதம் 31–ம் நாள் வெள்ளிக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.07.31 16:19:58 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை),**
**கோவில்பட்டி(மு.கூ.பொ).**